DETAILS OF THE PUBLIC HEARING HELD IN ARULMIGU SRI SAMUTHIRAMMAL THIRUKOVIL, T.RAJAGOPALANPATTI, ANDIPATTI TALUK, THENI DISTRICT AT 12.00 PM ON 24.12.2025 REGARDING OBTAINING ENVIRONMENTAL CLEARANCE FOR THE PROPOSED ROUGH STONE QUARRY BY TVL.VANNATHIPARAI NAGAMMAL KALLUDAIKUM MAGALIR SANGAM TO BE ESTABLISHED IN AN AREA OF 2.50.00 HECTARES AT 1619(PART) OF THIMMARASANAIKANUR BIT-II VILLAGE, ANDIPATTI TALUK, THENI DISTRICT

PARTICIPANTS;-

Thiruvalargal:-	
1.	The District Revenue Officer, Theni District. (The District Revenue Officer participated in the meeting on the instructions of the District Collector)
2.	The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Theni District.
3.	The Assistant Engineer, Tamil Nadu Pollution Control Board, Theni District.
4.	The Assistant Engineer, Tamil Nadu Pollution Control Board, Theni District.
5.	The Tahsildar, Andipatti, Theni District
6.	The Block Development Officer(V.P), Andipatti Taluk, Theni District.
7.	The Block Development Officer(B.P), Andipatti Taluk, Theni District.
8.	The Village Administrative Officer, Thimmarasanaickanur Bit-I Village, Andipatti Taluk, Theni District.
9.	The Village Administrative Officer, Thimmarasanaickanur Bit-II Village, Andipatti Taluk, Theni District.
10.	Revenue Inspector, Andipatti, Andipatti Taluk, Theni District.
11.	Project Consultant, Global Mining Solutions, Salem
12.	Public and Social Welfare Activists (List of 66 persons is attached.)

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Theni District in his welcome address, said, “Greetings to all. As the public hearing for the Vannathiparai Nagammal Kalludaikum Magalir Sangam Quarry is about to begin, I request everyone to express their opinions clearly and concisely. Please state your name, father's name and village, and then briefly present your views.”

The Project Consultant, Global Mining Solutions, Salem gave a detailed explanation of the project and its environmental impact through a power point presentation.

Following this, the public and social activists who attended the consultation meeting expressed their views as follows.

1. Thiru.Rajasekar, T. Rajagopalanpatti;

He said, "We need the stone quarry. We are in great difficulty. We definitely need this stone quarry."

2.Thiru. Selvam, Sedapatti;

He said, "The quarry is absolutely necessary; many families depend on the quarry."

3. Thiru.Marimuthu;-

He said, "I am doing stone breaking work. my livelihood depends entirely on this stone breaking work. The blasting does not cause any harm to anyone here. We don't use powerful explosives. We are only using small explosives. We will not use large explosives. Please grant permission for this quarry this one time; we will not ask for this quarry again next time. We need this quarry."

4. Thiru.Rasappan;-

He said, "I don't know any other work except stone work. We need this stone quarry."

5. Thiru.Perumal;-

He said, "My grandfather and father worked in this quarry. I also work in the stone quarry now. It is very difficult to educate my children. I can't even afford to buy them a book when they ask for one. We cannot go anywhere else from this village; we have children, and we need to educate them. I request the District Collector to somehow arrange for this quarry for us."

6. Thiru.Munusamy, T. Rajagopalapatti:-

He said, "Considering the livelihood of these 400 families, I humbly request that you grant us this stone quarry."

7. Thiru.Sakthivel:-

He said, "Our livelihood depends on the stone quarry. I kindly request that you provide us with this means of livelihood."

8.Thiru.Kumarasamy:-

He said, "If this stone quarry is given to us this one time, we will somehow manage to make a living with it."

9.Thiru.Ponram, T.Rajagopalapatti:-

He said, "We need the stone quarry. It is difficult to raise our children without the quarry. People who went to other towns in search of work are now returning to the village. Only with this stone quarry can we survive."

10.Thiru.Padmasamy:-

He said, "This quarry has not been operational for the past four years. Many people have gone to other towns. Therefore, I humbly request that this stone quarry be made available to everyone."

11.Thiru.Rajendran:-

He said, "My land is only 10 meters away from the stone quarry. I have four acres of land. There are bore wells. We are engaged in farming. Vehicles cannot move freely. When the lorries passby, stones fall onto my land. Therefore, I request that permission not be granted.

12.Thiru.Gnanavel:-

He said, "We have been working in the stone quarry for many years. Please grant permission for this. We don't know any other work besides this."

13.Thiru.Pandiaraj:-

He said, "Considering the welfare of those who work in the stone quarry here, I request that this stone quarry be granted."

14.Thiru.Veeran:-

He said, "The stone quarry must definitely be given to us; otherwise, we have no other option. We are wandering from village to village as jobless and without food."

15.Thiru.Mani:-

He said, "We reside in the Vannathipparai area. This place is convenient for us. It would be good for everyone if this quarry is opened."

16.Thiru.Murugan:-

He said, "Many people are speaking here; but they are not the ones who work in the quarry. They have been brought here under false pretences. Our agriculture

is severely affected. When blasting operations take place, the amount of dust anc air pollution increases significantly. Furthermore, water resources are also affected. The water needed for agriculture is not available, and the moisture seeps into the lower-lying areas. Therefore, I request that this quarry be stopped. Thank you."

17. Thiru.Kalingan:-

He said, "We definitely need this quarry. Please grant permission for it."

18. Tmt.Kaliammal:-

She said, "We need this quarry. I request that you definitely grant permission for this stone quarry."

19.Tmt.Vinothini:-

She said, "Only my husband is educated. His brothers, cousins, and other relatives who studied with him are all uneducated. For the sake of their children's education, I humbly request that you grant permission for the quarry this one time. Please approve this quarry."

20.Tmt.Sagunthala:-

She said, "The previous person spoke says that we have brought people here under false pretences. My husband works in the quarry. Currently, because there is no work, I am unable to pay the loan instalments I have taken and my children are also going to work digging soil. Do you know about that hardship? If we can't pay the loan for even one day, it is very difficult. We definitely need this quarry."

21. Thiru.Thangapandi, Sedapatti:-

He said, "Farming can only be done on agricultural land. We cannot go anywhere else to farm. They can do alternative work. They bring stones and cut them. We cannot go and farm in another place. Please take action in a way that does not harm the agricultural lands. When the stone quarries were operating before, the groundwater level decreased, and the water that is available now is also receding. We don't even know when it will rain. The nearby tank is already dry; the water drains away and dries up immediately. The 58 Graama Kanmai is located nearby, extending from here to Usilampatti. If that is affected, it will cause us even greater harm. The Pollution Control Board says that trees should be planted. They haven't planted a single tree. Even the Prosopis juliflora trees there were not planted by them; they grew naturally. Furthermore, the dust from the quarry

settles on the crops, causing them to wither. Only farmers know the pain and hardship of farming. We are sharing our difficulties,"

22. Tmt.Kalieswari:-

She said, "400 families depend on this stone quarry. Please grant permission for this quarry this one time."

23. Tmt.Pandiselvi:-

She said, "If permission is granted for this quarry this one time, all our children will be well."

24.Thiru.Pandi:-

She said, "Agriculture is being severely affected. Water bodies are completely affected. They have been quarrying stones for almost 40 years. Until now, we have not been affected. If we dig a bore well, even at 60-70 feet, there is no water. There are ten such bore wells. Only 1-2 of them have water. The water level has gone below 200 feet. This severely affects the land and water. To save agriculture, I request that this quarry be banned."

25.Thiru.Jaya:-

She said, "I currently have no job. My entire family depends on this quarryfor our livelihood. We have no other source of income. Please grant us this one opportunity. We have a strong desire to educate our children well. One child is working, but I am unable to continue my younger son's education. Considering the livelihood of our family, I humbly request that you please grant permission for this quarry just this one time."

26. Tmt.Alamelu:-

She said, "My husband was sent away from his workplace because the tender had ended. Would they ask him to take a shovel and work if there was no work at their own place? This is their own business. They have the right to do so. They sent him away because we don't have our own business. I want to educate my children well. That's why this quarry should be given to us."

27.Tmt.Jayapranima:-

She said, "I request that this quarry be granted to us this one time."

28.Tmt.Maheshwari:-

She said, "We are struggling a lot to educate our children. I request that this quarry be given to us for their education.

29.Thiru.Veluchamy:-

He said, "We have been involved in the stone quarry work for almost three generations. There are no losses involved in this. The livelihood of our families completely depends on this stone quarry. We want to work in this stone quarry and improve the future of our children. I request that this stone quarry be granted to us so that we can pursue this profession that we desire."

30. Thiru.Nagaraj:-

He said, "They are currently saying that agriculture is being affected. We accept that. The last time we took the tender, we worked on nearly four acres of land. Because it was said that this was affecting traffic, we ourselves stopped work on two acres of that land. Currently, farmers are drawing water from those pits and cultivating their crops successfully. But because there is no work in the quarry, our lives have become very difficult. We are struggling to educate our children; even if we go to other towns for work, we cannot live peacefully there. If parents go to other towns for work, the children go astray. If everyone wants to live well with their families, it is essential to live in their own hometown. Only if there is work locally can we live locally. Therefore, it is enough if permission is granted to open the quarry just this one time. We are ready to give a written assurance that we will not ask for it the next time. When tenders are issued, if they are given for three years out of five, the tender stops for the remaining five years. This leads to a situation where we lose everything we earned in those three years. Therefore, we humbly request that you please issue the quarry tender just this one time."

31.Thiru.Prabhu:-

He said, "Only if we cultivate, we can provide you with vegetables. If you prevent us from farming, how will you get all those products? Even when it rains, the water doesn't stay in the tank. As the quarry gets deeper, please investigate how many borewells we have dug. It costs up to one lakh rupees to dig a single borewell. Even after digging some borewells to a depth of 800 or 900 feet, there is no water. As the quarry gets deeper, the groundwater has completely disappeared. Water doesn't even stay in the tank for 20 days. We have no intention of ruining anyone's life. The quarry was at a higher level before. In another five years, the quarry will become even deeper. But even now, there is no water despite the depth. In this situation, if a quarry is established again and pits are dug, the remaining small amount of water will go even deeper. After that, a

situation will arise where we cannot do any farming at all. Therefore, I humbly request that you immediately stop this quarrying activity."

32.Thiru.Munusamy:-

He said, "Give permission for the quarry just this one time; we can see about it next time."

33.Tmt.Parimala:-

She said, "Give the tender for the quarry this one time. We don't know any other work. Please give this quarry to us.".

34. Tmt.Sangeetha:-

She said, "I have completed my studies and am currently staying at home without doing any job. When I go to ask for a job, they demand a bribe of 10,000 rupees; no one is ready to offer a job. In this situation, I humbly request that you grant permission for the quarry just this one time."

35. Thiru.Dinesh:-

He said, "Those who claim to have fought for one or two Lakhs cannot even pay their house rent of 1000 rupees properly. We all live by doing daily wage work. But daily wage work alone is not enough for us; we need quarry work. We cannot do anything without the rocks. About 40 young men like us are in this situation. This quarry work is very important for our livelihood; we cannot live without it. Therefore, I humbly request that you please grant permission for this quarry."

36. Tmt.Mariyammal:-

She said, "We definitely need this quarry."

37.Thiru.Raja:-

He said, "Because the groundwater is flowing into the quarry pits, we are unable to cultivate our land. Please take this into consideration. Conduct an inspection of the agricultural lands and see the situation firsthand. Currently, agriculture is completely affected. The main reason for this is the quarrying activities. Therefore, immediate action should be taken regarding this. They can work and live on government wasteland. We cannot cultivate on government wasteland. I humbly request that you take appropriate measures so that we can cultivate and live here properly."

Since no public came forward to express their views, the public hearing was concluded by requesting the public to submit the petitions if any to the District Revenue Officer.

The following details are attached herewith;-

1) Public Notice regarding the Public Hearing - Tamil and English
2) Certificate of the Village Administrative Officer, Kodangipatti
3) List of names of those who attended the public hearing
4) Video recording of the public hearing
5) Environmental Impact Assessment Report and Project Summary (Tamil and English)
6) Petitions received at the public hearing and petitions received by post-76 Nos.

8/1/26

DEE/TNPCB/THENI

08/01/26.

DRO/THENI

The District Collector,
Theni District.

<u>தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டம், திம்மரசநாயக்கனூர் பிட்-II கிராமம், புல எண். 1619 (Part)-ல் 2.50.0 ஹெக்டேர் பரப்பளவில் தி/ள். வண்ணாத்திப்பாறை நாகம்மாள் கல்லுடைக்கும் மகளிர் சங்கம் அவர்களால் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ள சரளைக்கல் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுதல் தொடர்பாக 24.12.2025 நண்பகல் 12.00 மணிக்கு தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டம், T.ராஜகோபாலன்பட்டி கிராமம், அருள்மிகு ஸ்ரீ சமுத்திரம்மாள் திருக்கோவிலில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்ட நடவடிக்கைகளின் விபரங்கள்;-</u>

பங்கேற்றோர்;-

திருவாளர்கள்	
1.	மாவட்ட வருவாய் அலுவலர், தேனி மாவட்டம். (மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில் மாவட்ட வருவாய் அலுவலர் கூட்டத்தில் பங்கேற்றார்)
2.	மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தேனி மாவட்டம்.
3.	உதவிப் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தேனி மாவட்டம்.
4.	உதவிப் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தேனி மாவட்டம்.
5.	வட்டாட்சியர், ஆண்டிபட்டி வட்டம், தேனி மாவட்டம்.
6.	வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.), ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியம், தேனி மாவட்டம்.
7.	வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ.), ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியம், தேனி மாவட்டம்.
8.	கிராம நிர்வாக அலுவலர், திம்மரசநாயக்கனூர் பிட்-1 கிராமம், ஆண்டிபட்டி வட்டம், தேனி மாவட்டம்.
9.	கிராம நிர்வாக அலுவலர், திம்மரசநாயக்கனூர் பிட்-2 கிராமம், ஆண்டிபட்டி வட்டம், தேனி மாவட்டம்.
10.	வருவாய் ஆய்வாளர், ஆண்டிபட்டி, ஆண்டிபட்டி வட்டம், தேனி மாவட்டம்.
11.	திட்ட ஆலோசகர், குளோபல் மைனிங் சொல்யூசன்ஸ், சேலம்
12.	பொதுமக்கள் மற்றும் சமூக நல ஆர்வலர்கள் (81 நபர்களின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.)

தேனி மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அவர்கள் தனது வரவேற்புரையில், "அனைவருக்கும் வணக்கம், வண்ணாத்திப்பாறை நாகம்மாள் கல்லுடைக்கும் மகளிர் சங்கம் குவாரிக்கு பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் துவங்க உள்ளதால் அனைவரும் தங்கள் கருத்துகளை தெளிவாகவும், சுருக்கமாகவும் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். உங்கள் பெயர், தகப்பனார் பெயர், ஊர் ஆகியவற்றை தெரிவித்து உங்கள் கருத்துகளை சுருக்கமாக தெரிவியுங்கள்" என்று தெரிவித்தார்.

இதனையடுத்து இத்திட்டம் தொடர்பான விரிவான விளக்கங்கள் மற்றும் சுற்றுச்சூழல் தாக்கத்தினை திட்ட ஆலோசகர், குளோபல் மைனிங் சொல்யூசன்ஸ், சேலம் அவர்கள் power point presentation மூலம் எடுத்துரைத்தார்.

இதைத் தொடர்ந்து கருத்துக் கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தங்களது கருத்துக்களை பின்வருமாறு தெரிவித்தார்கள்.

1.திரு.ராஜசேகர், T.ராஜகோபாலன்பட்டி:-

இவர் பேசுகையில்," கல்குவாரி வேண்டும். மிகுந்த கஷ்டத்தில் இருக்கிறோம். எங்களுக்கு இந்த கல்குவாரி கண்டிப்பாக வேண்டும்" என்று தெரிவித்தார்.

2.திரு.செல்வம், சேடபட்டி:-

இவர் பேசுகையில்,"குவாரி கண்டிப்பாக வேண்டும் நிறைய குடும்பங்கள் குவாரியை நம்பி இருக்கிறது." என்று தெரிவித்தார்.

3.திரு.மாரிமுத்து:-

இவர் பேசுகையில்,"நான் கல் உடைக்கும் வேலை செய்கின்றேன், என் வாழ்வாதாரமே இந்த கல் உடைக்கும் வேலைதான். வெடி வைப்பதால் இங்க யாருக்கும் எந்த பாதிப்பும் இல்லை. பலமாக வெடி வைப்பதில்லை. சின்ன வெடி தான் வைத்துக் கொண்டிருக்கின்றோம். பெரிய வெடி வைக்க மாட்டோம். இந்த ஒரு தடவை இந்த குவாரிக்கு அனுமதி கொடுங்கள், அடுத்த முறை நாங்கள் இந்த குவாரி கேட்க மாட்டோம். எங்களுக்கு இந்த குவாரி வேண்டும்." என்று தெரிவித்தார்.

4.திரு.ராசப்பன் :-

இவர் பேசுகையில்,"எனக்கு கல் வேலை தவிர வேறு எதுவும் தெரியாது. இந்த கல் குவாரி வேண்டும்." என்று தெரிவித்தார்.

5.திரு.பெருமாள்:-

இவர் பேசுகையில்,"எங்கள் தாத்தா, அப்பா காலத்தில் இந்த குவாரியில்தான் வேலை செய்தனர். நானும் இப்போது கல்குவாரியில் வேலை செய்கின்றேன். பிள்ளைகளை படிக்க வைப்பதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கின்றது. ஒரு புத்தகம் கேட்டால் கூட வாங்கிக் கொடுக்க முடியவில்லை. ஊரை விட்டு வேறெங்கும் செல்ல முடியவில்லை பிள்ளைகள் இருக்கின்றன பிள்ளைகளை படிக்க வைக்க வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவரிடம் எப்படியாவது இந்த குவாரியை எங்களுக்கு ஏற்படுத்தி தாருங்கள் என்று கோரிக்கை வைக்கிறேன்." என்று தெரிவித்தார்.

6.திரு.முனுசாமி , T.ராஜகோபாலன்பட்டி:-

இவர் பேசுகையில்,"இந்த 400 குடும்பங்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு எங்களுக்கு இந்த கல்குவாரியை தருமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்" என்று தெரிவித்தார்.

7.திரு.சக்திவேல்:-

இவர் பேசுகையில்,"எங்கள் வாழ்வாதாரமே கல் உடைப்பு தொழில்தான். எங்களுக்கு இந்த வாழ்வாதாரத்தை ஏற்படுத்தி கொடுக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்." என்று தெரிவித்தார்.

8.திரு.குமாரசாமி :-

இவர் பேசுகையில்,"இந்த ஒரு தடவை இந்த கல்குவாரி எங்களுக்கு கொடுத்தால் நாங்கள் இதை வைத்து எப்படியாவது பிழைத்துக் கொள்வோம், " என்று தெரிவித்தார்.

9.திரு.பொன்ராம் , T.ராஜகோபாலன்பட்டி:-

இவர் பேசுகையில்,"கல்குவாரி எங்களுக்கு வேண்டும், கல்குவாரி இல்லாமல் பிள்ளைகளை வாழ சிரமமாக இருக்கிறது. வேலை தேடி வெளியூருக்கு சென்று இப்போது தான் ஊர் திரும்பி வருகிறார்கள். இந்த கல்குவாரி இருந்தால்தான் நாங்கள் பிழைக்க முடியும்."என்று தெரிவித்தார்.

10.திரு.பத்மசாமி :-

இவர் பேசுகையில்,"இப்போது இந்த குவாரி நான்கு வருடங்களாக இயக்கத்தில் இல்லை. நிறைய மக்கள் வெளியூருக்கு போய்விட்டனர். அதனால் அனைவருக்கும் இந்த கல்குவாரி வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன். "என்று தெரிவித்தார்.

11.திரு.ராஜேந்திரன் :-

இவர் பேசுகையில்,"என் நிலம் கல்குவாரிக்கு 10 மீட்டர் இடைவெளியில் தான் உள்ளது. நான்கு ஏக்கர் நிலம் உள்ளது. போர் வெல் இருக்கிறது. விவசாயம் செய்து கொண்டிருக்கின்றோம். வாகனங்கள் சென்று வர முடியவில்லை. லாரிகள் சென்று வரும்போது கருங்கல் எல்லாம் என் நிலத்தில் விழுகிறது. ஆகையால் அனுமதி வேண்டாம் என்று கேட்டுக்கொள்கின்றேன்" என்று தெரிவித்தார்.

12.திரு.ஞானவேல்:-

இவர் பேசுகையில்,"பல வருடமாக கல்வேலை செய்து கொண்டிருக்கின்றோம். இதற்கு அனுமதி கொடுங்கள். எங்களுக்கு இதை விட்டால் வேறு வேலை தெரியாது" என்று தெரிவித்தார்.

13.திரு.பாண்டியராஜ் ;-

இவர் பேசுகையில்,"இங்கு கல்லுடைக்கும் தொழில் செய்பவர்களின் நலன் கருதி இந்த கல்குவாரி ஏற்படுத்தி தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்" என்று தெரிவித்தார்.

14.திரு.வீரன்;-

இவர் பேசுகையில்," எங்களுக்கு கல்குவாரி கண்டிப்பாக கொடுத்தாக வேண்டும் இல்லை என்றால் எங்களுக்கு வேறு வழியில்லை. நாங்கள் வேலையில்லாமல் உணவின்றி ஊர் ஊராக சுற்றுகிறோம்." என்று தெரிவித்தார்.

15.திரு.மணி ;-

இவர் பேசுகையில்,"நாங்கள் வண்ணாத்திப்பாறை பகுதியில் குடியிருந்து வருகிறோம். இந்து தான் எங்களுக்கு வசதியாக இருக்கிறது. இந்த சங்க குவாரியை திறந்தால் அனைவருக்கும் நன்றாக இருக்கும். " என்று தெரிவித்தார்.

16.திரு.முருகன்;-

இவர் பேசுகையில்,"இங்கு பலர் பேசுகின்றனர்; ஆனால் அவர்கள் குவாரியில் வேலை செய்பவர்களே இல்லை. அவர்களை பொய்யாக அழைத்து வந்திருக்கிறார்கள். எங்களுக்கு விவசாயம் கடுமையாக பாதிக்கப்படுகிறது. வெடிப்பு பணிகள் நடைபெறும் போது அதிக அளவில் தூசி, காற்று மாசு அதிகரிக்கிறது. மேலும் நீர்வளமும் பாதிக்கப்படுகிறது. விவசாயத்திற்கு தேவையான நீர் கிடைக்காமல், ஈரப்பதம் பள்ளமான பகுதிக்கு சென்று விடுகிறது. எனவே, இந்த குவாரியை தடை செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். நன்றி வணக்கம்." என்று தெரிவித்தார்.

17.திரு.காளிங்கன்;-

இவர் பேசுகையில்,"எங்களுக்கு இந்த குவாரி கண்டிப்பாக வேண்டும். இதற்கு அனுமதி கொடுங்கள்" என்று தெரிவித்தார்.

18.திருமதி.காளியம்மாள்;-

இவர் பேசுகையில்,"எங்களுக்கு இந்தப் பாறை வேண்டும் எங்களுக்கு இந்த கல்குவாரிக்கு நீங்கள் கண்டிப்பாக அனுமதி தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்" என்று தெரிவித்தார்.

19.திருமதி.வினோதினி;-

இவர் பேசுகையில்," என் கணவர் மட்டுமே படித்தவர். அவருடன் படித்த அண்ணன், தம்பி, மாமன், மச்சான் உள்ளிட்ட மற்றவர்கள் அனைவரும் படிக்காதவர்களாகவே உள்ளனர். அவர்களுடைய பிள்ளைகள் கல்வி பெறுவதற்காகவே, இந்த ஒருமுறை குவாரிக்கு அனுமதி வழங்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். தயவு செய்து இந்த குவாரிக்கு ஒப்புதல் வழங்குங்கள் " என்று தெரிவித்தார்.

20.திருமதி.சகுந்தலா:-

இவர் பேசுகையில்,"முன்பு பேசியவர் சொல்கிறார். நாங்கள் பொய்யாக ஆட்களை அழைத்து வந்திருக்கிறோம் என்று. என் கணவர் பாறை வேலைதான் செய்து வருகிறார். தற்போது அந்த வேலை இல்லாத காரணத்தால்,நான் வாங்கிய கடன் தவணைகளைச் செலுத்த முடியாமல் என் பிள்ளைகளும் சேர்ந்து மண் அள்ளும் வேலைக்கு செல்கிறார்கள். அந்த கொடுமை உங்களுக்கு தெரியுமா? ஒருநாள் கடன் கட்ட முடியவில்லை என்றால் மிகவும் சிரமமாக இருக்கிறது. எங்களுக்கு இந்த குவாரி கண்டிப்பாக வேண்டும்."என்று தெரிவித்தார்.

21.திரு.தங்கப்பாண்டி, சேடபட்டி:-

இவர் பேசுகையில்,"விவசாயம் செய்வதற்காக விவசாய நிலத்தில் மட்டுமே செய்ய முடியும். வேறு எங்கும் சென்று விவசாயம் செய்ய முடியாது. இவர்கள் மாற்று வேலை செய்யலாம். கல்லைக் கொண்டு வந்து வெட்டுகிறார்கள். நாங்கள் வேறு இடத்தில் சென்று விவசாயம் செய்ய முடியாது. தயவு செய்து விவசாய நிலங்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கு முன்பு கல்குவாரிகள் செயல்பட்டபோது நிலத்தடி நீர்மட்டம் குறைந்து, இப்போது கிடைக்கும் நீரும் கீழே இறங்கிக் கொண்டே இருக்கிறது. மழை எப்போது பெய்கிறது என்பதே தெரியாத நிலை உள்ளது. ஏற்கனவே அருகில் உள்ள கண்மாயில் நீர் இல்லை; நீர் வடிந்துவிட்டதால் உடனடியாக வற்றி போகிறது. பக்கத்தில் 58 கிராம கண்மாய் இங்கிருந்து உசிலம்பட்டி வரை செல்கிறது. அது பாதிக்கப்பட்டால் எங்களுக்கு இன்னும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திலிருந்து மரம் நட வேண்டும் என்று சொல்கிறார்கள். அவர்கள் ஒரு மரம் கூட நடவில்லை. அங்கிருக்கும் சீமைக் கருவேல மரம் கூட அவர்கள் நட்டதில்லை தானாக முளைத்தவைதான். மேலும், குவாரியிலிருந்து வரும் தூசி பயிர்களின்மீது படிந்து அவை கருகி விடுகின்றன. விவசாயத்தின் வேதனையும் கஷ்டமும் விவசாயிகளுக்கே தெரியும். எங்களின் கஷ்டத்தை நாங்கள் பகிர்ந்து கொள்கிறோம்"என்று தெரிவித்தார்.

22.திருமதி. காளீஸ்வரி :-

இவர் பேசுகையில்,"400 குடும்பம் இந்த கல்குவாரியை நம்பி தான் இருக்கின்றது. இந்த ஒரு தடவை இந்த குவாரிக்கு அனுமதி கொடுங்கள்" என்று தெரிவித்தார்.

23.திருமதி.பாண்டிச்செல்வி :-

இவர் பேசுகையில்,"இந்த ஒருமுறை இந்த குவாரிக்கு அனுமதி கொடுத்தால் எங்கள் பிள்ளைகள் அனைவரும் நன்றாக இருப்பார்கள்" என்று தெரிவித்தார்.

24.திரு.பாண்டி:-

இவர் பேசுகையில்,"விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டு வருகிறது. நீர்நிலைகள் முற்றிலும் பாதிக்கிறது. கிட்டதட்ட 40 ஆண்டுகளாக இவர்கள் கல் உடைக்கிறார்கள். இதுநாள்வரை எங்களுக்கு பாதிப்பு இல்லை. ஒரு போர்வெல் அமைத்தால் 60-70 அடி தோண்டினாலும் நீர் இல்லை. அதுபோன்று பத்து போர்வெல் இருக்கிறது. அவற்றில் 1-2-ல் நீர் இருக்கிறது. நீர்மட்டம் 200 அடிக்குக் கீழ் போய்விட்டது. இதனால் நிலமும், நீரும் மிகவும் பாதிக்கிறது. விவசாயத்தைக் காப்பாற்றுவதற்காக இந்த குவாரியைத் தடை செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்." என்று தெரிவித்தார்.

25.திருமதி.ஜெயா:-

இவர் பேசுகையில்,"எனக்கு தற்போது வேலை இல்லை. என் குடும்பம் முழுவதும் இந்த தொழிலையே நம்பித்தான் வாழ்ந்து வருகிறது. எங்களுக்கு வேறு எந்த ஆதாரமும் இல்லை. தயவு செய்து இந்த ஒரு வாய்ப்பை எங்களுக்கு வழங்குங்கள். எங்கள் பிள்ளைகளை நன்றாக படிக்க வைக்க வேண்டும் என்ற ஆசை உள்ளது. ஒரு பிள்ளை வேலைக்கு செல்கிறான். ஆனால் என் சிறிய மகனை தொடர்ந்து படிக்க வைக்க முடியாத நிலை உள்ளது. எங்கள் குடும்பத்தின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு, தயவு செய்து இந்த ஒரே தடவை இந்த குவாரிக்கு அனுமதி வழங்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்" என்று தெரிவித்தார்.

26.திருமதி.அலமேலு:-

இவர் பேசுகையில்,"வேலை செய்த இடத்திலிருந்து டெண்டர் முடிந்துவிட்டது என்று எனது கணவரை வேலையில் இருந்து அனுப்பிவிட்டார்கள். இதே அவர்கள் வீட்டில் வேலை இல்லையென்றால் மண்வெட்டி எடுத்து வேலை செய்ய சொல்வார்களா? இது அவர்களுக்கு சொந்த தொழில். அவர்களுக்கு உரிமை இருக்கிறது. எங்களுக்கு சொந்த தொழில் இல்லையென்று தான் அனுப்பி விட்டார்கள். எனது பிள்ளைகளை நன்றாக படிக்க வைக்க வேண்டும். அதனால் இந்த குவாரி கொடுக்க வேண்டும்"என்று தெரிவித்தார்.

27.திருமதி. ஜெயபிரணிமா:-

இவர் பேசுகையில்,"இந்த ஒருமுறை இந்த குவாரியை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்" என்று தெரிவித்தார்.

28.திருமதி.மகேஸ்வரி :-

இவர் பேசுகையில்,"பிள்ளைகளைபடிக்க வைக்க மிகவும் கஷ்டப்பட்டு கொண்டிருக்கின்றோம். அவர்கள் படிப்பதற்காக இந்த குவாரி வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்" என்று தெரிவித்தார்.

29.திரு.வேலுச்சாமி:-

இவர் பேசுகையில்,"நாங்கள் கிட்டதட்ட மூன்று தலைமுறைகளாக கல் உடைக்கும் தொழிலில் ஈடுபட்டு வருகிறோம். இதனால் எந்த இழப்பும் இல்லை. எங்கள் குடும்பங்களின் வாழ்வாதாரம் முழுமையாக இந்த கல்குவாரியையே நம்பி உள்ளது. இந்த கல்குவாரியில் வேலை செய்து, எங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை மேம்படுத்திக் கொள்ள விரும்புகிறோம். நாங்கள் விரும்பும் இந்த தொழிலை மேற்கொள்ள எங்களுக்கு இந்த கல்குவாரியை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்" என்று தெரிவித்தார்.

30.திருநாகராஜ்:-

இவர் பேசுகையில்,"இவர்கள் தற்போது விவசாயம் பாதிக்கப்படுவதாக கூறுகிறார்கள். அதை நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம். கடந்த முறை டெண்டர் எடுத்தபோது, கிட்டதட்ட நான்கு ஏக்கர் பாறை யில் வேலை செய்தோம். அதன் காரணமாக போக்குவரத்து பாதிக்கப்படுகின்றது என்று கூறப்பட்டதால், அதில் இரண்டு ஏக்கர் பணிகளை நாங்களே நிறுத்தி விட்டோம். தற்போது அந்த பள்ளங்களில் இருந்து விவசாயிகள் தண்ணீர் எடுத்து நன்றாக விவசாயம் செய்து வருகின்றனர். ஆனால் பாறை வேலை இல்லாததால் எங்களுக்கு வாழ்க்கை மிகவும் கடினமாக உள்ளது. பிள்ளைகளை படிக்க வைக்க முடியாமல் தவிக்கிறோம்; வெளியூருக்கு வேலைக்குச் சென்றாலும் அங்கு நிம்மதியாக வாழ முடியவில்லை. வெளியூருக்கு பெற்றோர் வேலைக்கு சென்றுவிட்டால் பிள்ளைகள் கெட்டுப் போய்விடுகிறார்கள். ஒவ்வொருவரும் குடும்பத்துடன் நன்றாக வாழ வேண்டும் என்றால், தங்கள் சொந்த ஊரிலேயே வாழ்வது அவசியம். உள்ளூரில் வேலை இருந்தால் தான் உள்ளூரில் வாழ முடியும். அதனால் இந்த ஒரே முறை குவாரியைத் திறக்க அனுமதி வழங்கினால் போதும். அடுத்த முறை வேண்டாம் என்று நாங்களே எழுத்துப்பூர்வமாக உறுதி அளிக்கத் தயாராக இருக்கிறோம். டெண்டர் விடும்போது ஐந்து ஆண்டில் மூன்று ஆண்டுகள் டெண்டர் விட்டால், இடையில் ஐந்து ஆண்டுகள் டெண்டர் நின்று விடுகிறது. மூன்று ஆண்டுகளில் சம்பாதித்த அனைத்தும் இழந்து விடும் நிலை ஏற்படுகிறது. எனவே, தயவு செய்து இந்த ஒரே முறைக்கு குவாரி டெண்டர் விடுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்" என்று தெரிவித்தார்.

31. திரு.பிரபு:-

இவர் பேசுகையில்,"விவசாயம் செய்தால்தான் நாங்கள் காய்கறிகள் உங்களுக்கு கொடுக்க முடியும். நீங்கள் விவசாயத்தைச் செய்ய விடாமல் தடுத்தால், அந்தப் பொருட்கள் எல்லாம் உங்களுக்கு எப்படி கிடைக்கும்? மழை பெய்தாலும், தண்ணீர் கண்மாயில் நிற்பதில்லை. குவாரி ஆழம் போக போக நாங்கள் எத்தனை போர்வெல் அமைத்திருக்கிறோம் என்று ஆய்வு செய்து

பாருங்கள். ஒரு போர் போடுவதற்கே ஒரு லட்சம் ரூபாய் வரை செலவு ஆகிறது. சில போர்கள் 800 அடி, 900 அடி ஆழம் வரை தோண்டினாலும் தண்ணீர் இல்லை. குவாரி ஆழம் போக போக நிலத்தடி நீர் முற்றிலும் இல்லாமல் போய்விட்டது. கண்மாயில் தண்ணீர் 20 நாட்கள் கூட இருப்பதில்லை. நாங்கள் யார் வாழ்க்கையையும் கெடுக்கும் நோக்கத்தில் இல்லை. குவாரி முன்பு மேல்மட்டத்தில் இருந்தது. இன்னும் ஐந்து வருடத்தில் குவாரி ஆழமாகி விடும். ஆனால் இப்போது ஆழமாகச் சென்றாலும் தண்ணீர் இல்லை. இந்நிலையில் மீண்டும் குவாரி அமைத்து பள்ளங்கள் தோண்டப்பட்டால், மீதமுள்ள சிறிதளவு நீரும் இன்னும் ஆழத்திற்கு போய்விடும். அதன் பிறகு எங்களால் விவசாயமே செய்ய முடியாத நிலை உருவாகும். ஆகையால், இந்த குவாரி நடவடிக்கையை உடனடியாக நிறுத்துமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்" என்று தெரிவித்தார்.

32.திரு. முனுசாமி:-

இவர் பேசுகையில்,"இந்த ஒரு முறை மட்டும் குவாரிக்கு அனுமதி கொடுங்கள் அடுத்த முறை பார்த்துக்கொள்ளலாம் " என்று தெரிவித்தார்.

33.திருமதி.பரிமளா:-

இவர் பேசுகையில்,"இந்த ஒரு தடவை குவாரிக்கு டெண்டர் கொடுங்கள். எங்களுக்கு வேறு வேலை தெரியாது. தயவு செய்து இந்த குவாரியை எங்களுக்கு கொடுங்கள்" என்று தெரிவித்தார்.

34.திருமதி. சங்கீதா :-

இவர் பேசுகையில்,"படித்து முடித்து தற்போது வீட்டிலேயே இருந்து வருகிறேன். வேலை கேட்டு சென்றால் 10,000 ரூபாய் லஞ்சம் கேட்கிறார்கள்; யாரும் வேலை வழங்க தயாராக இல்லை. இந்த நிலையில் இந்த ஒரு தடவை மட்டும் குவாரிக்கு அனுமதி வழங்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்" என்று தெரிவித்தார்.

35.திரு.தினேஷ்:-

இவர் பேசுகையில்,"ஒரு லட்சம், இரண்டு லட்சத்திற்கு போர் போட்டதாக சொல்பவர்கள் ஒரு 1000 ரூபாய் வீட்டு வாடகை கூட சரியாக செலுத்த முடியவில்லை. அனைவரும் கூலி வேலை செய்து தான் வாழ்க்கை நடத்துகிறோம். ஆனால் கூலி வேலை மட்டும் எங்களுக்கு போதுமானதாக இல்லை; எங்களுக்கு குவாரி வேலை அவசியம். பாறை இல்லாமல் எங்களால் எதையும் செய்ய முடியாது. எங்களைப் போலவே சுமார் 40 இளைஞர்கள் இந்த நிலைமையில் இருக்கிறார்கள். எங்களின் வாழ்வாதாரத்திற்கு இந்த பாறை வேலை மிகவும் முக்கியம்; அது

இல்லாமல் எங்களால் வாழ முடியாது. ஆகையால், தயவு செய்து இந்த குவாரிக்கு அனுமதி வழங்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். "என்று தெரிவித்தார்.

36.திருமதி.மாரியம்மாள்:-

இவர் பேசுகையில்,"எங்களுக்கு இந்த குவாரி கண்டிப்பாக வேண்டும்" என்று தெரிவித்தார்.

37.திரு.ராஜா:-

இவர் பேசுகையில்,"நிலத்தடி நீர் குவாரி பள்ளங்களுக்குள் சென்று கொண்டிருப்பதால், எங்களால் விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதை தயவு செய்து பரிசீலனையில் எடுத்துக் கொள்ளுங்கள். விவசாய நிலங்களில் ஆய்வு செய்து நிலைமை எப்படி உள்ளது என்பதை நேரில் வந்து பாருங்கள். தற்போது விவசாயம் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதற்கான முக்கிய காரணம் இந்த குவாரி நடவடிக்கைகளே. ஆகையால், இதுகுறித்து உடனடியான நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்கள் அரசு புறம்போக்கு நிலத்தில் வேலை செய்து வாழ முடியும். நாங்கள் அரசு புறம்போக்கு நிலத்தில் விவசாயம் செய்ய முடியாது. நாங்கள் இங்கே விவசாயம் செய்து வாழ நல்ல முறையில் உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இதையடுத்து பொதுமக்கள் எவரும் கருத்துக்கள் கூற முன்வராததால், மாவட்ட வருவாய் அலுவலரிடம் மனுக்கள் ஏதேனும் இருப்பின் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொண்டு கருத்துக் கேட்பு கூட்டத்தை நிறைவு செய்யப்பட்டது.

கீழ்க்கண்ட விபரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது;-

1) பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் குறித்த பொது வெளியீடு-தமிழ் மற்றும் ஆங்கிலம்

2) கிராம நிர்வாக அலுவலர், கோடாங்கிபட்டி அவர்களின் சான்று

3) பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்தில் கலந்து கொண்டோரின் பெயர் பட்டியல்

4) பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்ட ஒளிப்பதிவு-விரலி(Pendrive)

5) சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

6)பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள் மற்றும் தபால் மூலம் பெறப்பட்ட மனுக்கள்-76

8/1/26 — 28/01/26 — 28/01/26

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தேனி மாவட்டம்.	மாவட்ட வருவாய் அலுவலர், தேனி மாவட்டம்.	மாவட்ட ஆட்சித் தலைவர், தேனி மாவட்டம்.